முருகப்பெருமான் துணை

**மகான் சேதுமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.02.2024**, புதன்கிழமை

1. மனுதர்மம் காத்திட வேண்டி
மகானாக வந்த குருவே
ஞான ஆனந்த பலம் பெற
ஞானியே உலகினில் அறம் கூட்டி
2. கூட்டியே ஞான வழிகாட்டும்
குருவரங்கனே உன் பெருமை கூறி
திட்டமுடன் சோபகிருது சால் திங்கள்
தக்க உபய திகதி கணக்கன் வாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 02 ம் நாள், 14.02.2024, புதன்கிழமை)
3. வாரமதில் துல்லிய ஆசியை
வழங்குவேன் சேதுமுனிவர் யானும்
பாரதம் ஞானத் தலைமை பெற
பற்றியே பேருலகமே ஞான ஆளுமை
4. ஆளுமை கண்டிட உரைப்பேன்
ஆன்மீக ஞான களமதை
ஆளுமை கண்டிட வேண்டி
அரங்கன் உருவாக்கி இருக்க
5. இருக்கவே எந்த பேதமும் கருதா
இணைக்கும் அரங்கன் வழியில்
கருத்தாக மக்களெல்லாம் சேர்ந்து
காப்பாயென மக்கள் தானும் வேண்டி
6. வேண்டியே சேவை ஆற்றிட
வெற்றி தா என களம் காண
தொண்டர்கள் நடுவிலே அரங்கன்
தெய்வ தரும ஞான சக்தி
7. சக்தி இறங்கி காரிய வெற்றி
சகலவாறு மனபலம் கூட்டி
சக்தி கூடிட அரங்கன் படை
சாகசம் படைக்கும் கலியினில்

8. கலியின் கொடுமை ஆட்சிகள்
கட்டுப்பாடில்லா பதுக்கல் ஊழல்
அழிவுற முடிவுற மாற்றங்கள்
அரங்கன் ஆசிபட கண்டடையும்

9. அடையவே ஞானப்படைகளாக
அகிலம் முழுக்க பரவிட
நாடு பிடிக்கும் மக்களை மாற்றும்
நாசக்கார மத துவேசிகள் எல்லாம்

10. எல்லாம் முடிவுக்கு வந்து
யாதும் ஊரே யாவரும் கேளீர்என
வல்லமை மிக்க வேலவனே
வணங்கும் ஒரே தலைவனென

11. என அற்புதம் கண்டுமே
இணையில்லா ஞான ஆட்சி
ஞானம்பட பேருலகம் காணும்
நாட்டிவந்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—